 ISSN: 2454-3993

# ஆண்டாளின் ஆற்றாமை உணர்வுகள்

*முனைவர் இரா. பிரியதர்ஷினி*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*ஜி.டி.என். கலைக் கல்லூரி,*
*திண்டுக்கல்*

ஆன்மாக்கள் பழவினைகள் நீங்கப்பெற்று இறைவனை அடைய உதவுவது பக்திநெறி ஆகும். இப்பக்திநெறி அந்தந்த சமயங்களுக்கும், கொள்கைகளுக்கும் ஏற்ப மாற்றம் கொண்ட சமயம் வைணவம் ஆகும். அறியாமையை நீக்கி, உயிர் உய்வதற்கு வழிகாட்டும் பழம்பெரும் சமயம் வைணவம் எனலாம்.

ஐவணவ சமயத்தைச் சிறப்புச் செய்தவர்கள் ஆழ்வார்கள், திருமால் அழயவர்களுள் தலைமை வாய்ந்தவர்களாகத் திகழ்பவர்களை ‘ஆழ்வார்கள்’ என்பர். ஆழ்வார் என்ற சொல்லிற்கு திருமாலின் பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தவர்கள் என்று பொருள் கொள்ளலாம்.

**ஆண்டாளின் திரு அவதாராம்**

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகத் திகழ்பவர் ஆண்டாள் ஆவார் ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒரே ஒரு பெண்கொடியாய் தோன்றியவர் ஆழ்வார்கள் அனைவராலும் திருமகளாய் போற்றப்படுபவர் ஆழ்வார்கள் அனைவராலும் திருமகளாய் போற்றப்படுபவர். மணவாளமாமுனிகள்,

**“அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்**
**தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாள்ப் பிஞ்சாய்ப்**
**பழுத்தாளை ஆண்டாளைப் பக்தியுடன் நாளும்**
**வழுத்தாய் மனமே மகிழ்ந்து”**

என்னும் பாசுரத்தில் (மே. எ.) சா. நீலகண்டன் (பதி.), திருவழ மலர்கள், ப. : 385.) ஆண்டாளின் பெருமையை உணர்த்துகின்றார். திருமாலையே மணாளனாகக் கொண்ட பெருமையும் உடையவர்.

**ஆண்டாளின் படைப்புக்கள்**

ஆண்டாள் கண்ணன் மீது அளவற்ற காதல் கொண்டவர். அவர் இறைவன்பால் கொண்ட ஆழ்ந்த அன்பும், தேர்ந்த அறிவுத்திறமும் அவரை இலக்கியப்புலமை மிக்க சான்றொராகத் தமிழுலகிற்கு எடுத்துக்காட்டுகின்றன. ஆண்டாள் பாடியருளியவை திருப்பாவை, ாநச்சியார் திருமொழி என்னும் இரண்டு படைப்புக்களாகும். கண்ணன் மீது கொண்ட காதல் வெளிப்பாடுகளாக இவை திகழ்கின்றன.

திருப்பாவை எளிய நடையில் இறைவனைத் துயில் எழுப்புவதாக அமைந்த முப்பது இனிய பாசுரங்களைக் கொண்டமைகின்றது. காண்பவை எல்லாம் காதலன் திருவடியே என்ற எண்ணம் கொண்ட ஆண்டாள் மாயவன்பால் தான் கொண்ட மெய்யுணர்வுக் காதலை அகப்பொருளைப் பாடுபொருளாகக் கொண்ட பதினான்கு திருமொழி, நூற்றுநாற்பத்தி மூன்று பாசுரங்களை உடையதாக பாசுரங்களாக வடித்ததெ ‘நாச்சியார் திருமொழி’ எனலாம்.

**காதல் துறைகள்**

கண்ணனின் அழகிலே மனதைப் பறிகொடுத்து அவனையெ மணாளனாக அடைவதை வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவளாதலால் காதல் மீதூரப் பாசுரங்களை ஆண்டாள் மிகச் சிறப்பாகப் பாழயுள்ளார். சங்கப் புலவர்கள் பயன்படுத்திய பல அகத்துறைகளைப் பயன்படுத்தியள்ளார். தொல்காப்பியர் களவிற்குரியனவாகக் கூறும் வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கஞ் செப்பல், நாணுவரை இறத்தல் முதலிய துறைகளும் (தொல். பொருள். நூ.: 97.)

**“இறையோன் றன்னைநொந் தியற்பட மொழிதலும்**
**கனவுநலி புரைத்தலும் கவினழி வுரைத்தலும்**
**தன்துயர் தலைமகற் குரைத்தல் வேண்டலும்”** (அகப். விள. நூ.: 164: 6-8.)

என்று அகப்பொருள் விளக்கம் உரைக்கும் துறைகளும் ஆண்டாள் பாசுரங்களில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு அகப்பொருள் துறைகளைப் பயன்படுத்திப் பிரிவுத்துயரை வெளிப்படுத்தும் ஆண்டாளின் பாசுரங்கள் பயிலப்பயில இன்பம் பயப்பனவாய் உள்ளன.

**இரங்கள்**

மிகுந்த துன்பத்தால் உள்ளம் தவிக்கும் நிலையை 'இரங்கல்' என்ற கூறுவர். இது நெய்தல் நிலத்திற்குரிய உரிப்பொருளாகும். தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாடுகளுள் அழுகை தோன்றும் சூழலை (தொல். பொருள். நூ.: 249.) விளக்குகின்றார். இந்நிலையில் இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல் கண்துயில் மறுத்தல் முதலானவை உண்டாகம் என்பர். இவ்வகைகைத் துளைகளை ஆண்டாள் பாசுரங்களிலும் காண முடிகின்றது. கண்ணனைப் பிரிந்த பல்வேறு நிலைகளில் தன் ஆற்றாமையைத் தெரிவித்து மனமிரங்குகின்றார்.

**பொழுது கண்டிரங்கல்**

கண்ணனை நினைத்துப் புலம்பும் ஆண்டாளுக்கு கார், இளவேனில் முதலிய பருவங்களும் தென்றல் காற்றும் துன்பத்தைப் பெருக்குகின்றன. பாடும் குயில்களிடம் எம்பெருமான் அருள்கொண்டு வந்து சேர்ந்தால் அப்போது உங்களை வரவழைத்து உங்களது பாட்டுகளைக் கேட்போம் என்று தன் துன்பத்தை இளவேனிற் பருவத்தின் வழி அமைத்து,

**"பாடும் குயில்கள் ஈது என்ன பாடல் நல் வேங்கட**
**நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்**
**ஆடும் கருளக் கொழ உடையார் வந்து அருள்செய்து**
**கூடுவராயிடில் கூவி நும் பாட்டுக்கள் கேட்குமே" (நா. தி. பு. ஏ.:10:5)**

என்னும் பாசுரத்தின்வழி வெளிப்படுத்தியுள்ளார்.

பிரிந்து வாழும் அன்புடையார்க்க இனிய தென்றல் காற்றும் துன்பத்தையே தரும். பத்துப்பாட்டுள் ஒன்றான நெடுநல்வாடை நல்வாடையானது தலைவியின் பிரிவால் தலைவிக்கு நெடுவாடையாகத் தோன்றியதை இயம்புகின்றது. ஆண்டாளும் காதலினால் தென்றல் காற்றைக் கண்டு வருந்துகின்றார். தனது நிலையை,

**"அன்று உலகம் அளந்தானை உகந்து**
**அடிமைக்கண் அவன் வலி செய்ய**
**தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை**
**நலியும் முறைமை அறியேன்" (நா.தி. பா.எ.: 5:10)**

என்று வரும் பாசுர அடிகளின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். பருவ வரவினால் சங்ககாலத் தலைவி அடையும் துன்பத்தை,

**"சுடர்செல் வானம் சேப்பப் படர்கூர்ந்து**
**எல்லுறு பொழுதின் முல்லை மலரும்**
**மாலை என்மனார் மயங்கி யோரே**
**குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்**
**பெரும்புலர் விடியலும் மாலை**
**பகலும் மாலை துணை இலோர்க்கே" (குநற்தொகை, பா.எ.:234.)**

என்னும் குறந்தொகைப் பாடலில் மிளைப்பெருங்கந்தனார் இயம்பும் பகுதி ஒப்பிட்டுக் காணக்வுழய ஒன்றாகும்.

காதல் வாழ்விற்கு அடிப்படையான அன்பதான் பக்தி வாழ்விற்கும் அடைப்படையாய் அமைகின்றது. இன்பப் பாடல்களைக் காட்டிலும் தலைவன் பிரிவால் ஏற்படும் துன்பப் பாடல்களில் மிகுதியான இலக்கியநயத்தையும், உணர்ச்சிப் பெருக்கையும் காண முடிகின்றது. இதனால்தான் ச. முருகன், "ஆண்டாள் தனது ஆற்றாமையைப் புலப்படுத்துவது பாங்குடையதாக உள்ளது. வெள்ளம்போல் காதல் உணர்வு பொங்கிப் பாய்ந்தோடும் வளமிக்க இப்பாசுரங்கள் ஆண்டாளின் தெய்வீகக் காதல் நலம் கூறுவது" (ச. முருகன், வைணவ வேதம், ப.110) என்கிறார்.

**இயற்கையைக் கண்டு இரங்குதல்**

ஆண்டாள் பலவாறாக மேகங்களிடம் விண்ணப்பம் செய்தும் அவற்றால் எந்தவொரு பயனும் ஏற்படவில்லை. அம்மேகக் கூட்டங்கள் நின்ற இடத்திலிருந்தே மழையைப் பொழிந்தன. முழையின் காரணமாக கருவிளை, முல்லை, காயா முதலியவை நினைவுக்கு வர வருந்துகின்றார். கண்ணன் மேல் கொண்ட காதலால் பார்க்கும் பொருட்கள் எல்லாம் அவனையே போறல்' என்று சுட்டுகின்றன.

'சிந்துரச் செம்பொடி' என்று தொடங்கும் பதிகத்துப் பாசுரங்கள் ஆண்டாளின் ஆற்றாமை மீதூர்ந்த நிலையை உரைக்கின்றன. முழைக்காலத்தில் சுற்றித் திரியும் இந்திர கோபமென்னும் பட்டுப்பூச்சிகள் கண்ணனின் செந்நிறவாயையும், திருமாலிருஞ்சொலை மலையானது அவனுடைய சுந்தரத் தோளையும் நினைவூட்டுவதால் தான் வருந்தும் நிலையை எடுத்துக் கூறி, அக்கள்வன் எனது வரிவளையும் கொண்டானே என்று புலம்புகின்றார்

ஓங்கிய மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருமாலிருஞ்சோலையில் நின்ற கோலமாய் எழுந்தருளியுள்ள சிவந்த திருக்கண்களையும், காளமேகம் போன்ற வழவினையுமுடைய எம்பெருமானுடைய அழகிய சுனைகளே, அச்சுனைகளில் உள்ள செந்தாமரை மலர்களே என்று இயற்கைப் பொருட்களை எல்லாம் பார்த்து, 'நீங்கள் எம்பெருமானிடம் சென்று எனது நிலைமையவை அவனுக்கு உணர்த்தி என்னை அவனுடன் கூட்ட வேண்டும்' என்று வேண்டுகின்றார். இக்கருத்தை,

''செங்கண் கருமுகிலின் திருவுருப் போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள் தொகு பூஞ்சுனைகாள் சுனையிற்
தங்கு செந்தாமரைகாள் எனக்கு ஓர் சரண் சாற்றுமினே''
(நா.தி. 9:5)

எனவரும் அடிகளில் உணர்த்துகின்றார். ஆண்டாளின் இத்தகு நிலை அன்பின் வெளிப்பாடாக ஆற்றாமையை எடுத்துரைப்பதாகும்.

குண்ணனின் செவ்வாயில் பொருந்திய சங்கு எழுப்பும் ஒலியும், அவன் தோளில் தொங்கும் சார்ங்கம் என்ற வில்லின் நாணொலியும் கேட்கப்பெற்று நான் உயிருடன் வாழ்வது எந்நாளோ என்று தனது வேட்கை மிகுந்து நாணிழந்து உரைப்பதை,

''பூங்கொள் திருமுகத்து மடுத்து ஊதிய சங்கு ஒலியம்
சார்ங்கவில் நாண் ஒலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ''
(நா. தி. 9:9)

என்னும் பாசுரத்தால் அறியமுடிகின்றது. கே.ஏ. மணவாளன் இதற்குப் பொருள் கூறுகையில், ''இப்பாடலில் சங்கொலியையும், நாணொலியையும் கேட்பது எந்நாளோ என்று ஆண்டாள் கூறியிருப்பதற்குக் காரணம், சங்கொலியாலே ருக்மணிப் பிராட்டியும், வில்லொலியாலே சீதாப்பிராட்டியும் வாழ்ச்சி பெற்றாற் போல யான் வாழ்ச்சி பெறுவேன் என நினைத்து ஏக்கத்தில் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம்''
(கே.ஏ. மணவாளன், ஆண்டாள், ப.:71.)

**பிரிவற்றாது வருந்துதல்**

கண்ணனைப் பிரிந்து நிலையில் இயற்கையில் காணப்படும் காட்சிகள் எல்லாம் ஆண்டாளுக்கு ஆற்றாமையை உண்டாக்குகின்றன. கார்காலத்திலே மலரும் காந்தள் மலர்களை நோக்கி, எம்பெருமான் திருமேனியை நினைவூட்டி தம்மை கொலை செய்வதற்காகவே போர் செய்ய அலங்கரித்து அனுப்பிய கண்ணன் எங்கிருக்கின்றான் என்று வினவுகின்றார் கார்காலத்தில் முல்லை பூப்பது இயல்பானது. பூத்திருக்கும் முல்லையைக் கண்டதும் கண்ணனின் இளமுறுவல் நினைவுக்கு வருகின்றது. ஆற்றாமை மிக்க அம்முல்லையை நோக்கி வேண்டுவதை,

**''முல்லைப் பிராட்டி நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை**
**அல்லல் விளைவியேல்.............'' (நா.தி. :10.4)**

எனவரும் அடிகளில் இயம்புகின்றார். கோவைக் கொடியைப் பார்த்து,

**''கோவை மணாட்டி நீ உன் கொழுங்கனி கொண்டு எம்மை**
**ஆவி தொலைவியேல்................'' (நா.தி. : 10''13)**

எனவரும் அழகளில் நீ உன்னுடைய அழகிய பழளங்களாலே என்னுடைய உயிரைப் போக்கலாகாது என்றுரைக்கின்றார். இங்ஙனம் எந்தப்பக்கம் நோக்கினும் ஏதாவது ஒரு மலர் அல்லத ஒரு பொருள் கண்முன் தோன்றி கண்ணனை நினைவுறுத்துவனவாக உரைக்கின்றார்.
நம்மாழ்வாரும்,

**"பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற**
**குவி மலர் என்றும் காண்தோறும் - பாவியேன்**
**மெல் ஆவி மெய் மிகவே பூரிக்கும் அவ்வவை**
**எல்லாம் பிரான் உருவே என்று"     (நாலா. தி. பி. பா.எ.:10:6)**

என்றும் உரைக்கின்றார். கண்ணபிரானின் அழகிய வடிவு போன்ற வடிவுடையராய் சிறந்து நாட்டியம் ஆடுகின்ற மயில்காள், உங்களுடைய திருவழகளிலே வணங்குகின்றேன் என வருந்துகின்றார்.

இப்படியே தம்மை வருத்திய மயில்களிடத்தும், மேகங்களிடத்தும் கடலினிடத்திலும் தனது ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றார். திருள்ளுவரும்

**"செல்லாமை உண்டேல் எனக்குஉரை மாற்றுநின்**
**நல்வரவு வாழ்வோர்க்கு உரை"     (திருக்குறள், குறள்:1151.)**

என்று பிரிவாற்றாமையை தனி அதிகாரமாக கற்பியலின்கண் அமைத்துக் கூறுவது ஆண்டாளின் நிலைக்கு விளக்கமாய் அமைகின்றது

**தொகுப்புரை**

பன்னிரு ஆழ்வார்களும் போற்றும் பெண்பிள்ளையாய்த் திகழ்வது ஆண்டாளுக்குரிய தனிச்சிறப்பாகும்.

தன் காதலை, கண்ணன் மீது கொண்ட வேட்கையைப் புலப்படுத்தும் 'நச்சியார் திருமொழி' ஆண்டாளின் 'காதல் திருமொழியாக' அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

ஆண்டாள் திருவரங்கள் மீது கொண்ட காதலும் அவனையே மணாளனாகப் பெற்றதும் களவு, கற்பு என்னும் பண்டைத் தமிழரின் அகத்திணை மரபினை அடியொற்றியதாக அமைந்துள்ளன.
ஆண்டாள் பிரிவின் காரணமாக வருந்தும் இடங்களிலெல்லாம் அவரது அன்புறுதியும், மனத்தின் திண்மையும் வெளிப்படுவதைக் காண முடிகின்றது.

**சான்றாதாரங்கள்**

1. கமலக்கண்ணன். இரா.வ. (உ.ஆ.) – நாலாயிர திவ்யப் பிரபந்தம், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை – 17, 2ம் பதிப்பு:2001.
2. நீலகண்டன். சா. முதலானோர் (பதி.) – திருவடி மலர்கள், தமிழ்த்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி. முதல் பதிப்பு:2005
3. மணவாளன். கே.ஏ. – ஆண்டாள், சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 1 பதிப்பு: 1990
4. முருகன். ச. – வைணவ வேதம், காவ்யா, சென்னை. முதல் பதிப்பு: 2004
5. கலைக்களஞ்சியம் (தொகுதி – 6) - தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. முதல் பதிப்பு:1958)